DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.10/2025 | Deposition of Witness for : PW1 |
| Name : வேல்முருகன் | Father/Husband Name : சிவபெருமாள் |
| Age : 29 | Village : பேய்க்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 June 2026.
Accused Present.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது பேய்க்குளத்தில் குடியிருந்து மாவுமில் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 03.02.2024 அன்று அதிகாலை 05.15 மணியளவில் என் அப்பா வெளியே சென்றுவிட்டார். எனக்கு இசக்கிமுத்து என்பவர் கைப்பேசியில் தொடர்பு கொண்டார், அவர் என் தந்தைக்கு விபத்து நேர்ந்துவிட்டதாகவும், நீ உடனடியாக லியோ கிளீனிக்கிற்கு வா என்றும் கூறினார். நானும் என் அம்மாவும் சென்று பார்த்தோம். என் அப்பாவிற்கு தலையில் அடிபட்டு மூக்கு மற்றும் காது வழியாக இரத்தம் வந்து கொண்டிருந்தது. பேச்சு மூச்சில்லாமல் இருந்தார். மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அப்பாவை சேர்த்தோம். மருத்துவர்களின் சிகிச்சை பலன் அளிக்காமல் மறுநாள் 04.02.2024 அன்று சுமார் அதிகாலை 3.30 மணியளவில் என் அப்பா இறந்துவிட்டார். இதுசம்பந்தமாக நான் புகார் அளித்தேன்.

2. TN 76 AC 2036 TVS Phoenix என்ற வாகனத்தை எதிரி இசக்கிமுத்து என்ற கோட்டை இசக்கிமுத்து என்பவர் வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து, ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அருகில் சுமார் காலை 5.15 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்காக நடந்து வந்த என் அப்பாவை பின்பக்கமாக மோதிவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

3. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் கூறியதன்பேரில் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் கைப்பட எழுதினேனா அல்லது வேறு யாரும் எழுதிக் கொடுத்தார்களா என்றால் நான் கைப்பட எழுதினேன். அ.சா.ஆ.1ல் 03.02.2024 அன்று ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் அருகே வீட்டிற்கு நடந்துவரும் போது


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.29 17:17:32 +0530

விபத்து நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேன், அதில் நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது, விபத்து நடந்தது காலையிலா அல்லது மாலையிலா என்று குறிப்பிடவில்லை என்றால் புகாரில் குறிபிடப்படவில்லை ஆனால் காலை 5.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. வண்டியை ஒட்டிக்கொண்டுவந்தது யார் போன்ற விபரங்கள் எனக்கு போலீசார் கூறியதன்பேரில்தான் தெரியும் என்றால் அதற்கு முன்பே எனக்கு தெரியவந்தது. விபத்தில் இறந்துபோன என்னுடைய அப்பாவை மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்த பின்பு தகவல் அறிந்து போலீசார் வந்தவுடன் என்னிடம் எத்தனை கையொப்பம் வாங்கினார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, புகாரில் ஒரு கையொப்பம் செய்தேன். போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்காக என்னிடம் எழுதி வாங்கிய பேப்பரை எழுதியது யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் போலீசாரிடம் எப்போது கொடுத்தேன் என்றால் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இறந்துபோன எனது அப்பா சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது புகார் மனுவை எழுதி போலீசாரிடம் கொடுத்தேன். அ.சா.ஆ.1ல் போலீசார் சொல்லிய விபரங்களைத்தான் நான் எழுதியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி என்னுடைய தகப்பானாரின் இறப்புக்கு எதிரிக்கு எந்த விதத்திலும் தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. போலீசாரால் உற்பத்தி செய்யப்பட்ட வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் என்னுடைய தகப்பனாருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாருக்கு வேறு எங்கே ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக போலீசாரின் ஆதரவோடு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என்னுடைய அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் பலவீனப்பட்டு இருந்தார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.29 17:17:47 +0530

Judicial Magistrate, Sathankulam.